18th November 1963]

திரு. மு. கருணாநிதி : தேசிய ஒருமைப்பாடு உணர்ச்சியை வளர்க்கும் திட்டத்தின்படி பள்ளிக்கூடங்களுக்கான பாடப்புத்தகங்கள் எழுதப்பட்டனவா ? அந்தப் புத்தகங்களில் 'திராவிடம், திராவிடர்' என்ற சொற்கள் இருக்குமா ? அல்லது விலக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேசீயப் பாடலிலேயே 'திராவிடம்' என்ற சொல் இருக்கிறது. கனம் அங்கத்தினர் இதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம்.

சர்க்கார் மரக்கிடங்கு (பொள்ளாச்சி)

*236 கேள்வி.—**திரு. க. ர. நல்லசிவம் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) பொள்ளாச்சியில் சர்க்காருடைய கிடங்கில் உள்ள மரங்கள் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடப்பது உண்மையா ?

(இ) அவைகளின் மதிப்பென்ன ?

(உ) இவைகளை விற்பனை செய்வதற்கு சர்க்கார் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) (இ) : பொள்ளாச்சியிலுள்ள அரசாங்க மரவடியில் மரங்கள் விற்பனையாகாமல் அதிக அளவுக்குத் தேங்கிக் கிடக்க வில்லை. 15-7-1963-ல் 28,804 கன அடி மரமும், 30-9-1963 ல் 23;536 கன அடி மரமும் மரவடியில் விற்பனையாயின. 1963 அக்டோபரில் இருந்த இருப்பு நிலையின்படி, மரவடியில் 53,547 கன அடி மரம் இருப்பில் உள்ளது. அதன் தோராய மதிப்பு ரூ. 2,62,316 ஆகும்.

(உ) கோயம்புத்தூர் தெற்கு டிவிஷனைச் சேர்ந்த ஜில்லா காட்டு அதிகாரி குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை விற்பனைகள் நடத்தி வருகிறார்.

திரு. க. ர. நல்லசிவம் : இந்த மரங்களை வெளி ராஜ்யங்களில் இருந்து அதிகமாக வாங்குகிறார்களா ?

கனம் திரு. ந. நல்ல சேனுபதி சர்க்கரை மன்றாடியார் : ஏலத்திற்கு எல்லா பாகங்களிலிருந்தும் வந்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

*237 கேள்வி.—**திரு. இரா. நாராயணன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மருத்துவ மனைகள் இல்லாத பஞ்சாயத்து யூனியன்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்க உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதியிலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் திறப்பதே அரசாங்கத்தின் கொள்கையாகும். ஆனால், தேசீய